# தூதன்

தூதன்-28 ஜனவரி 2019 தூது-1

அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான். மத்தேயு 14:29




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 04 |
| உதவி ஆயரம்மா மடல் | 06 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 08 |
| உதவி ஆயரம்மா மடல் | 10 |
| செயலர் மடல் | 12 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 14 |
| புத்தாண்டு 2019 | 16 |
| ஆராதனை பாடல்கள் | 18 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 19 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| வேலி அடைக்கப்பட்ட தோட்டம் | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| தெரிந்துகொள்வோம் | 26 |
| Health Tips | 28 |
| Children's Corner | 30 |
| Birthday Celebrants | 33 |
| Wedding Anniversary | 36 |
| A day in the Holy Temple - Part 1 | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் எங்களுக்கு மிகவும் பிரியமான அன்பின் திருச்சபை மக்களே, இறைமகன் இயேசுகிறிஸ்துவின் ஒப்பற்ற திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

ஆண்டவர் இயேசுவின் அளவில்லாத கிருபையின் பெலத்துடன் 2019-ம் ஆண்டில் நுழைந்திருக்கின்றோம். புதிய ஆண்டு, புதிய உதயம், புதிய கிருபை, புதிய நன்மை, புதிய ஆசீர்வாதங்கள் என்று முற்றிலும் புதிதானவைகளை எதிர்நோக்கும் நமக்கு நம் இறைமகன் இயேசு புதிய, புதிய அனுபவங்களை நம் பற்றுறுதிப் பயணத்தில் தந்தருள்வாராக.

இந்த புதிய ஆண்டிற்கான நம்பிக்கையின் இறைவாக்கு:

புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு.
யாத்திராகமம் 14:15

'Tell the Israelites to Move on' Exodus 14:15

இஸ்ராயேல் மக்களின் விடுதலைப்பயணத்தில் மிக முக்கியமான காலக்கட்டத்தில், திருப்புமுனையாக, வாழ்வு தரும் நம்பிக்கையின் வார்த்தையாக சர்வவல்லமையுள்ள யெஹோவா தேவன் கொடுத்த நம்பிக்கையின் வார்த்தையையே இப்புதிய ஆண்டின் இறைவாக்காக உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

In the Fearful situation God gave a Powerful Word.
பயம் நிறைந்த சூழலில் ஆண்டவரின் ஆற்றல் மிகுந்த வாக்கு.

பின்புறம் பார்வோனின் படைகளின் துரத்தல், முன்புறம் ஆர்ப்பரிக்கும் செங்கடல், நடுவினில் இஸ்ராயேல் மக்கள், மரண பயத்தில் செய்வதறியாது திகைத்துப்போன மக்களுக்கு, கடவுள் தரும் ஆற்றல் மிகுந்த வார்த்தை "புறப்பட்டுப் போங்கள்" நான் எல்லாவற்றையும் என் கட்டுப்பாட்டில் வைத்துள்ளேன். பார்வோனின் சேனையோ, ஆர்ப்பரிக்கும் செங்கடலோ உங்களைத் தொடமுடியாது. புறப்பட்டுப்போங்கள், நான் உங்களுடன் இருக்கிறேன். நீங்கள் கலங்கிட வேண்டாம். பழைய ஆண்டின் கசப்புகளை, இழப்புகளை, தோல்விகளை எண்ணி நின்று கொண்டிருக்க வேண்டாம். நான் உங்களுக்காக புதிதானவைகளை வைத்திருக்கிறேன், புறப்பட்டுப் போங்கள்.

## In the Hopeless situation God gives Hopeful Word.

### நம்பிக்கையற்ற சூழலில் ஆண்டவரின் நம்பிக்கை தரும் வாக்கு.

ஒன்று பார்வோனின் சேனையினால் அழிவு. இல்லாவிடில் செங்கடலில் மூழ்கி அழிவு. இனி தப்பிப் பிழைக்க ஒரு வாய்ப்பும் இல்லையென்று நம்பிக்கையற்றுப் புலம்பலோடும், தவிப்போடும், அங்கலாய்ப்போடும் இருந்த இஸ்ராயேல் மக்களுக்கு, உங்களுக்கு பார்வோன் சேனையாலும் அழிவில்லை, செங்கடலினாலும் அழிவில்லை. நான் உங்களுக்காக நிறைவேற்றப்போகும் அற்புதங்களைக் காண, அதிசயங்களைக்காண நம்பிக்கையுடன் புறப்பட்டுப்போங்கள்.

கத்தியில்லாமல், இரத்தமும், யுத்தமும் இல்லாமல் நீங்கள் விடுதலையைக் காணப்போகிறீர்கள், எனவே புறப்பட்டுப்போங்கள்.

## In the Unpleasant situation God gives a Joyful Word.

### மகிழ்ச்சியற்ற சூழலில் ஆண்டவர் தரும் மகிழ்ச்சியான வாக்கு.

எந்த நிமிடத்திலும் மரணம் நமக்கு நேரிடலாம். எந்த மணித்துளிகளில் என்ன நடக்கப்போகிறதோ என்று திகில் நிறைந்த சூழலில், மகிழ்ச்சி மறந்துபோன தருணத்தில், இஸ்ராயேலரின் மாட்சிமை பொருந்திய கடவுள் அருளும் மகிழ்ச்சியின் இறைவாக்கு, புறப்பட்டுப்போங்கள். 2018-ம் ஆண்டில் நிரந்தரமற்ற சூழல்கள், பயம் நிறைந்த பாதைகள், கசப்புகள், இழப்புகள், தோல்விகள் என்று பல அனுபவங்களைப் பெற்று துவண்டுபோய் மகிழ்வற்ற நிலையில் நாம் இருந்திருக்கக்கூடும்.

ஆனால் நம்மைப் படைத்த ஆண்டவர், இமைப்பொழுதும் நம்மைக் கைவிடாமல் பராமரித்துவரும் அன்பின் தெய்வம் இயேசு அன்போடும், பரிவோடும், பாசத்தோடும் சொல்கிறார், புறப்பட்டுப்போங்கள் என்று இம்மகிழ்வற்ற சூழலில் ஆண்டவர் அருளும் மகிழ்ச்சியின் வாக்கு.

2019-ம் ஆண்டிற்குள் ஆற்றல் தரும் ஆண்டவர் வாக்கைப் பற்றிப்பிடித்து ஆண்டவர் காட்டும் பாதையில் பயணிப்போம், புறப்பட்டுப்போவோம் வாருங்கள்.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

ஆண்டவரின் அருட்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# உதவி போதகர் மடல்

## வாக்குத்தத்த செய்தி

**2019-ல் உங்கள் மகிழ்ச்சி தொடரும். ஏசாயா 60:15 (b)**

தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப் பார்க்க அழைக்கும் நித்திய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக. உங்கள் அனைவருக்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

நம் ஆண்டவர் நமக்குத் தலைமுறை தலைமுறைக்கும் அடைக்கலமும், ஆசீர்வாதமுமாய் இருக்கிறார். அது ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு மட்டுமல்ல, ஒருநாளில் இருந்து அடுத்த நாளுக்கும், ஒரு வருடத்திலிருந்து அடுத்த வருடத்துக்கும் தொடர்கின்றது. எப்படி இஸ்ரவேலருக்கு மன்னா இடைவிடாமல் தொடர்ந்து தினமும் கிடைத்ததோ, அப்படியே இந்த ஆண்டும் நம்முடைய மகிழ்ச்சி தொடரும் என வாக்குச் செய்கின்றார்.

### 1.மகிழ்ச்சியைத் தொடரச் செய்யும் வாக்குத்தத்தம் :

இஸ்ரவேலர்கள் இரண்டு தலைமுறைகளுக்கு, அதாவது 70 ஆண்டுகள் (எரே.29:10) பாபிலோனில் அடிமைத்தனத்திலிருந்தனர். இஸ்ரவேல் மக்கள், தங்களுக்குத் தேவன் வாக்குப்பண்ணின எல்லையிலிருந்து துரத்துண்டார்கள் (cut off). அவர்களின் ஆசீர்வாத நிலையிலிருந்து தொலைந்து போனார்கள். 70 ஆண்டுகளாக அதைக் காணவில்லை. அவர்களைத் தேவன் மீண்டும் இஸ்ரவேலில் கொண்டுவந்து சேர்த்தது மட்டுமல்லாமல், அவர்களின் மகிழ்ச்சி தொடருமென்றும், இனி அந்த தேசம் தலைமுறை தலைமுறையாக அவர்கள் சந்ததிக்கு, கர்த்தருடைய ஆசீர்வாதமாக தொடரும் என்று (ஏசாயா 60:15) வாக்குத்தத்தத்தின் மூலம் மீண்டும் உறுதிப்படுத்துகிறார்.

எந்த ஆசீர்வாதம் சிலகாலம் நம் வாழ்வில் காணப்படாமல் இருக்கிறதோ, எந்த வேலையை சிலகாலம் இழந்திருக்கிறோமோ, எந்த சமாதானத்தை, எந்த சுகத்தை இழந்திருக்கிறோமோ, எந்த நன்மை நம் வாழ்வில் சிலகாலம் இல்லாமல் அறுப்புண்டு (cut off) கிடக்கிறதோ, அது இந்த 2019-ல் கிடைக்கும், அது தொடர்ந்து கிட்டும், அதை வாக்குத்தத்தம் செய்யும்.

### 2. மகிழ்ச்சியைத் தொடரச் செய்யும் பிதாவின் வல்லமை:

இயேசு ஜீவனுள்ளோர் தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார் (cut off) என எழுதப்பட்டபடியே (ஏசாயா 53:8) ஆனது. அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு பாதாளத்திற்கு இறங்கினார். இயேசுகிறிஸ்து ஜீவனுள்ளோர் தேசத்திலிருந்து அறுப்புண்டு மரித்தோரின் தேசத்திற்குப் போனார். ஆனால் அவர் தகப்பன் (பிதா) எல்லா வல்லமையையும் உடையவர். அவர் தம்முடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுப்பி, குமாரனைத் தூக்கி, ஜீவனுள்ளோரின் தேசமாகிய பிதாவின் வலது பாரிசத்தில் உட்காரச்செய்து, குமாரனை மகிமைப்படுத்தினார். கிறிஸ்துவின் மகிழ்ச்சியை தொடரப்பண்ணினார்.

இந்த 2019-ல், கிறிஸ்துவை விசுவாசிக்கும் நம் வாழ்விலும், பிதாவின் வல்லமை விளங்கும், மகிழ்ச்சி தொடரும்.

### 3. மகிழ்ச்சியைத் தொடரச் செய்யும் உணர்வின் ஆவியானவர்:

இளையகுமாரன் மாயையான உலக சந்தோஷத்தைத் தேடி தூரமாகப் போனான். அது அவனை வெட்கப்படுத்த ஆரம்பித்தது. தகப்பனுடைய வீட்டிலிருந்த போதுள்ள மகிழ்ச்சி அறுப்புண்டு போனது. பன்றியின் நடுவே வாழ்ந்தான். துக்கம் அவனைத் துவளச் செய்தது. ஒருநாள் அவன் (லூக்கா 15:17) உணர்வடைந்தான். புத்தி தெளிந்தது. அது அவனைத் தன் தகப்பனோடு இணைத்தது. இளையகுமாரன் வாழ்வில் மீண்டும் மகிழ்ச்சி தொடர்ந்தது.

பாவங்களுக்காக மனஸ்தாபப்படும்போது, இழந்துபோன மகிழ்ச்சி இளையகுமாரன் வாழ்வில் மீண்டும் தொடர்ந்தது (லூக்கா 15:23,24). அப்படியே ஆண்டவர் நம்முடைய வாழ்வில் இந்த ஆண்டில் மகிழ்ச்சியைத் தொடரச்செய்து ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**சிந்திக்க ஒரு சிறுகதை**

Winter vacation விட்ட மகிழ்ச்சியில் டிம்பிள், பள்ளியை விட்டு வீட்டுக்கு வந்தாள். டிம்பிள் தன் அப்பாவிடம், “இந்த Winter vacation-க்கு எங்கேயாவது வெளியே கூட்டிச் செல்லவேண்டும்” என ஆசையோடு கேட்டாள். அப்பாவும் சரியென தலையசைத்தார். டிம்பிள் 7வது படித்துக்கொண்டிருந்தாள்.

அப்பா தேவனுக்குப் பயந்து, தேவவசனத்தையே நம்பி வாழும் அனுபவமுடையவர். அவர் எப்போதும் தன் மகள் டிம்பிளிடம், “தேவனுடைய கிருபையே போதும்” என்று சொல்லுவார். டிம்பிள் பரீட்சையில் தோல்வியடைந்தபோதும் அதைத்தான் சொன்னார். அடுத்த வகுப்பிற்கு அவள் தேர்வாகாமல் கவலைப்பட்டபோது, அதைச் சொல்லித்தான் உற்சாகப்படுத்தினார். சாயங்காலம் சாப்பிட பலகாரம் இல்லாவிட்டாலும் அதைச் சொல்லுவார். அவருக்கு வேலையில்லா சூழ்நிலை வந்தபோதும் அதையே சொன்னார். இப்படி எந்தச் சூழ்நிலையிலேயும், தேவனுடைய கிருபையே தன் குடும்பத்தை நடத்த போதுமானதென்று நம்பியிருந்தார்.

கர்த்தருடைய கிருபையின் விஸ்தாரத்தை டிம்பிளால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. “அப்பா, உலகம் முழுவதும் மக்கள். கடவுளது கிருபை இவர்கள் எல்லாருக்கும் போதுமா? தேவனுடைய கிருபை என் வாழ்க்கை முழுவதற்கும் போதுமா? அவை என்னுடைய எல்லா பிரச்சனைகளுக்கும் முடிவை உண்டாக்கும் அளவுக்கு பெரியதா?” என்று கேட்பாள்.

அப்பா அந்த Winter vacation-ல் ஜெபல் ஜேஸ் மலைக்குக் கூட்டிச்சென்று, அதின் உச்சியை அடைந்ததும், “சுவாசி, சுவாசி” என்றார். டிம்பிள் மூச்சு ஆழமாய் இழுத்துவிட்டாள். “சுவாசி, சுவாசி, இங்கிருக்கும் காற்றை எல்லாம் சுவாசித்து காலி செய்துவிட வேண்டும்” என்றார் அப்பா. “அப்பா அது எப்படியப்பா முடியும்? இந்த காற்றை எல்லாம் என்னால் ஒருநாளும் சுவாசித்து முடிக்க முடியாதப்பா” என்று கலகலவென சிரித்தாள் டிம்பிள்.

“அதுதான் தேவனுடைய கிருபை. இந்த உலகத்திலுள்ள காற்றை எல்லாம் நாம் சுவாசித்து காலி செய்யமுடியாதது எப்படியோ, அப்படியே தேவனுடைய கிருபையும் முடிவில்லாதது” என விளக்கினார் அப்பா. டிம்பிளுக்கு புரிந்துவிட்டது.

டிம்பிளும் அப்பாவும் புத்தாண்டு ஆராதனைக்குச் சென்றார்கள். அங்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் : “என் கிருபை உனக்குப்போதும்”

உங்கள் எல்லாப் பிரச்சனைகளுக்கும் போதுமானதாக, உங்கள் வாழ்க்கை முழுவதற்கும் போதுமானதாக, தேவனுடைய கிருபை அவ்வளவு உயரமானது, அவ்வளவு ஆழமானது, அவ்வளவு அகலமானது!

வேதவாசிப்புப் பகுதி : எபேசியர் 1:4-8
மனப்பாட வசனம் : 2 கொரிந்தியர் 12:9

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃ.பர் ஆல்வின்,
உதவி ஆயரம்மா.

## வாழ்த்துகிறோம்

கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 19-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mrs.Shimona & Mr.Sam

கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 29-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Paul & Mrs.Sherryl

கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 29-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Jesuwin & Mrs.Leona
இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# உதவி போதகர் மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். கடந்த வருடம் முழுவதும் கண்மணிபோலப் பாதுகாத்த கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.

புதிய வருடமாகிய 2019-ம் ஆண்டின் ஆரம்ப நாட்களிலிருந்து, இறைவேண்டலுடனும், திருவசன தியானத்துடனும், திருச்சபை ஆராதனைகளிலும், பற்றுறுதி வாழ்விலும் ஆர்வத்துடன் நம்மை அர்ப்பணிப்போம். கர்த்தரின் நடத்துதலைத் தினமும் உணர்ந்து மகிழ்ந்து வாழ்வோம். அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் காரணரான கர்த்தர் இப்புதிய வருடத்திலும் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

புதிய ஆண்டின் முதல் மாதத்தில் கர்த்தரின் வசனத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருமறைப்பகுதி : எபேசியர் 5:6-20 தியான வசனம் : எபேசியர் 5:14c

"கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பார்." "Christ will shine on you"

எபேசியர் நிருபம் மிகவும் சிறந்த கருத்துக்களைத் தன்னுள் கொண்டுள்ளது. தூய பவுலடியார் கிறிஸ்துவின் ஒளிரச்செய்யும் தன்மைகளை எடுத்துரைக்கின்றார். மனுக்குலத்தின் இருளின் செயல்பாடுகளை அகற்றி ஒளியான, உயர்வான நிலைக்கு நடத்த இயேசுகிறிஸ்துவால் இயலும் என்கிறார்.

இயேசுகிறிஸ்து நமது வாழ்வை பிரகாசமடையச்செய்ய நாம் எவ்விதம் வாழவேண்டும் என தியானிப்போம்.

1.Live wisely - ஞானமுள்ளவர்களாய் வாழ்தல்: (எபேசியர் 5:15) "நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து" "Be very careful, then, how you live not as unwise but as wise."

ஞானம் கர்த்தர் அருளும் அருட்கொடை. ஞானத்தை கடவுள் அருளும் ஞானம் என்றும், மனித முயற்சியினால் பெற்றுக்கொள்ளும் ஞானம் என்றும் வகைப்படுத்தலாம். ஞானத்தைச் சம்பாதிப்பது சிறப்பானது என சாலமோன் ஞானி குறிப்பிடுகிறார். கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என திருவசனம் போதிக்கிறது. கர்த்தருக்குப் பயந்து, இறை ஞானத்துடன் வாழும்போது, வாழ்வில் வியத்தகு செயல்களில் உயர்வதை அனுபவிக்க இயலும். "கர்த்தரிடம் ஞானம் கேட்கும்போது சம்பூரணமாய் வழங்குகிறார்." (யாக்கோபு 1:5).

தெளிந்த புத்தியுடன் விழித்திருக்கவில்லையெனில், தீய ஆற்றலின் செயல்பாடுகள், நம்மை ஆட்கொண்டு வாழ்வை வீழ்ச்சியடையச்

செய்கிறது (1 பேதுரு 5:8,9). இறைஞானத்துடன் வாழ்ந்து, எல்லாச் சுழலிலும், நம் வாழ்வை பிரகாசமடையச்செய்ய கர்த்தர் கிருபை செய்வார்.

2.Use your opportunities wisely தருணங்களை தக்கவைத்து வாழ்தல்: (எபேசியர் 5:16) "....காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்." "Making the most of every opportunity."

தருணங்கள் நமக்காகக் காத்து நிற்பதில்லை. தருணங்கள் தவறினால் தவறிழைத்தவர்களாகிவிடுவோம். தருணங்களை நாம்தான் தக்கவைத்துக் கொள்ளவேண்டும். லூக்கா 10:38-42 வரையுள்ள பகுதியில், இயேசுகிறிஸ்து மார்த்தாள்-மரியாள் சந்திப்பு கூறப்பட்டுள்ளது. மரியாளின் செயல்பாடு பாராட்டுதலுக்குரியதாகவும், வாழ்வில் உயர்வானதைப் பெற்றுக் கொண்டதை உணர்ந்தவராகக் காணப்படுகிறாள். இயேசுகிறிஸ்துவின் பாதத்தருகே அமர்ந்து வசனம் கேட்பது மிகப்பெரிய, ஆசீர்வாதமான தருணமாக எண்ணி தக்கவைத்தாள். தருணங்களை தக்கவைத்து வாழ கர்த்தர் கிருபை செய்வார்.

3. Understand God's will கர்த்தருடைய சித்தம் உணர்ந்து வாழ்தல்: (எபேசியர் 5:17) "நீங்கள் மதியற்றவர்களாயிராமல் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்." "Do not be foolish, but understand wht the Lord's will is."

கர்த்தரின் சித்தம் உணர்ந்து வாழ்பவருக்கு எல்லாச் சூழல்களும் மகிழ்ச்சியானது. ஏனென்றால் தனது எல்லாத் திட்டங்களிலும், தீர்மானங்களிலும், ஒழுங்குகளிலும், இறைவனின் பிரசன்னமும், நடத்துதலும் உண்டு என்ற நம்பிக்கை.

"இறைவா, என் சித்தம் அல்ல, உம்முடைய சித்தம் என்னில் நிறைவேறட்டும்" என்ற சிந்தனையுடனும், இறைவேண்டலுடனும் அர்ப்பணித்து வாழ்வோம்.

இயேசுகிறிஸ்து, பிதாவின் சித்தம் என்ற உணர்வுடன் பாடுகளிலும், நிந்தைகளிலும், புறக்கணிப்பிலும் வாழ்ந்து வெற்றி சிறந்தார். பிதா, இயேசுவாகிய இரட்சகரை பிரகாசமடையச் செய்தார். புத்தாண்டில் வாழ்கின்ற நம் வாழ்வை ஒவ்வொரு நாளும் பிரகாசிப்பார். கர்த்தரின் வசனத்திற்கு நம்மை அர்ப்பணித்து வாழ்வோம்.

கர்த்தர் உங்கள் குடும்பவாழ்வு, திருச்சபை, பணிவிடைகள், கல்வி, உங்கள் முயற்சிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் 2019-ம் ஆண்டின் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த வருடம் முழுவதும் கர்த்தர் நமக்கு நல்லவராக, போதுமானவராக இருந்து வழிநடத்தினார். தொடர்ந்து இந்தப் புதிய ஆண்டில் கர்த்தர் எபிநேசராக, இம்மானுவேலராக இருந்து வழிநடத்துவார்.

## குறைவை நிறைவாக்கும் கர்த்தர்

திருமறைப்பாடம் : 1 இராஜாக்கள் 17:8-16
தியான வசனம் : 1 இராஜாக்கள் 17:16

"பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை,
கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை"

ஆகாப் ராஜாவின் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் மறுபடியுமாகக் கர்த்தரை விட்டு விலகிப் பாவஞ்செய்தபோது மூன்றரை வருடம் தேசத்தில் மழை பெய்யவில்லை. தேசத்தில் கொடிய பஞ்சம் உருவானது. எலியா தங்கியிருந்த இடத்தில் கேரீத் ஆற்றின் நீர் வற்றிப்போனபின் கர்த்தர் எலியாவிடம் சாரிபாத் ஊருக்கு போகக்கூறினார். எலியா தீர்க்கரும் சாரிபாத் ஊர் சென்று விதவையைச் சந்திக்கின்றார். அவள் குறைவுடன் காணப்பட்டாள். குறைவு நீங்கி நிறைவைப் பெற்றுக்கொள்ள அவள் எப்படிச் செயல்பட்டாள் என்பதை 1 இராஜாக்கள் 17:8-16 வரையுள்ள வசனங்களிலிருந்து தியானிப்போம்.

1. இறைவார்த்தையை நம்பினாள் (1 இராஜா.17:14): எலியா தீர்க்கதரிசி சாரிபாத் ஊர் விதவையிடம் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்கின்றார். பின்பு கொஞ்சம் அப்பமும் கொண்டுவா என்று கூறுகின்றார். அந்த வேளையில் தன் நிலைமையை எடுத்துக் கூறுகின்றாள். என்னிடம் பானையில் ஒருபிடி மாவும், கலசத்தில் கொஞ்சம் எண்ணெயும் அல்லாமல் வேறொன்றுமில்லை. நாங்கள் மடிந்துபோக இருக்கிறோம் (1 இராஜா.17:12).

தீர்க்கர் கூறுகின்றார், கர்த்தர் தேசத்தில் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையில் மா செலவழிந்துபோவதும் இல்லை, கலசத்தில் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். ( 1இராஜா. 17:14).

ஆம். இவள் நம்பினாள். இந்த பஞ்சகாலத்தில் இருக்கின்ற எங்களுக்குக் கர்த்தர் நிறைவைத் தருவார் என்ற இறைவார்த்தையை நம்பினாள். ஒருவேளை கடந்த வருடம் இதே சூழல் நமக்கும் ஏற்பட்டிருக்கலாம். கர்த்தருடைய வாக்கை நம்புவோம். இஸ்ரவேல் ஜனங்கள் 40 வருடம் வனாந்திர பாதையில் கடந்து வந்தபோது கர்த்தர் அவர்களோடு இருந்தபடியால் அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடவில்லை. நாமும் இறைவாக்கை நம்புவோம்.

2. இறைதீர்க்கன் சொற்படி செய்தாள் (1 இராஜா. 17:15): இந்த தாய் இறைவார்த்தையை நம்பினது மட்டுமல்லாமல், இறைசொற்படி செய்கின்றாள். என்ன செய்தாள் என்றால் தனக்காகவோ, தன் மகனுக்காகவோ அடையைச் செய்து வைக்கவில்லை. முதலாவது அடையைச் செய்து தீர்க்கனுக்குக் கொடுக்கின்றாள். அதைத்தான் திருமறை வசனம் கற்றுத்தருகிறது. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடகொடுக்கப்படும்.

சிறுபையன் தன் கையில் இருந்த 5 அப்பம் 2 மீன்களையும் தனக்கென்று வைக்காமல் கொடுத்தபோது, அந்த சொற்பமானதைக் கொண்டு அநேகர் பசியை போக்கவல்லதாயிருந்தது. இறைநாமம் மகிமைப்பட்டது.

அதேபோல்தான் இந்த தாய் முதலாவது அடையைச் செய்து தீர்க்கனுக்குக் கொடுக்கின்றாள். பஞ்சகாலம் முடியும்வரை நிறைவை கண்டுகொள்கின்றாள். திருமறையில் கூறியுள்ளபடி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் (பிலிப்பியர் 4:19).

ஆம் அன்பானவர்களே, நாமும் நம்மிடம் உள்ள சொற்பமானவை எதுவாயிருந்தாலும் ஒருவேளை அறிவில் குறைவுபடலாம், வருமானம் குறைவுபடலாம். எதுவாக இருந்தாலும் இயேசுகிறிஸ்து நம் குறைகளை நிறைவாக்க வல்லவர் என்பதை நம்புவோம். அவருடைய இறைவார்த்தைபடி செய்யும்போது நாம் எந்த நிலைகளிலெல்லாம் குறைவுபடுகிறோமோ அவைகளை நிறைவாக்க கர்த்தர் வல்லவராயிருக்கிறார். நம்முடைய சரீரபிரகாரமான ஆவிக்குரிய பிரகாரமான குறைகளை நிறைவாக்கி நம்மை உயர்த்த கர்த்தர் வல்லவராயிருக்கிறார். இயேசு நம்மோடிருக்கும்போது நாம் எதிலும் குறைவுபடமாட்டோம்.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி J.விஜிலா ராணி
உதவி போதகரம்மா.

# செயலர் மடல்

சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய்ச் செய்து முடித்து, நம் யோசனைகளையும் நடைகளையும் உறுதிப்படுத்தி இன்னும் ஒரு புதிய வருடத்தைக் காணச்செய்த நம் உயிர்த்தெழுந்த ஆண்டவருக்கு துதிகளையும், கனத்தையும், மகிமையையும் செலுத்துகிறேன். இப்புத்தாண்டு நம் அனைவருக்கும் உலகம் கொடுக்கக்கூடாத கிறிஸ்துவின் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டுவரும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

இப்பண்டிகைக் காலங்களை கிறிஸ்துவுக்குள்ளாக பரிபூரணத்தோடு கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள் என்று நம்பி தேவனைத் துதிக்கிறேன். டிசம்பர் 6-ம்தேதி அன்று நமது முகாம் சகோதரர்கள் DIP பகுதியில் நமது சபைப்போதகர் Rev. Victor Premkumar அவர்கள் தலைமையில் கிறிஸ்மஸ் மரவிழா நடத்தி மகிழ்ந்தார்கள். நமது திருச்சபையின் பெண்கள் ஐக்கிய சங்கத்தினர் டிசம்பர் 7ஆம் தேதி அன்று ஆலய ஆராதனையில் கிறிஸ்மஸ் கால சிறப்புப் பாடல்கள் பாடி நம்மை மகிழ்வித்தார்கள். டிசம்பர் 10ஆம் தேதி அன்று சிறுவர்களின் கிறிஸ்மஸ் பாடல் ஆராதனையை திருமதி. சாராள் மோகன்தாஸ் அவர்களும், நமது சபையின் பாடகர் குழுவினர் கிறிஸ்மஸ் பாடல் ஆராதனையை திரு. ஜேஸன் அவர்களும் நடத்தினார்கள். டிசம்பர் 7ஆம் தேதி அன்று மாலை நமது கிளைச்சபையான ஃபுஜைரா திருச்சபையின் அறுப்பின் பண்டிகை மிகச் சிறப்பாக நடைபெற்றதற்காகக் கர்த்தரைத் துதிக்கிறேன். அதற்காக உழைத்த திரு. S.Prince அவர்களுக்கும் இன்னும் பலவிதங்களில் அவருடன் உதவி செய்த யாவருக்கும், கொடுத்த, ஜெபித்த அனைத்து திருச்சபையின் அங்கத்தினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

டிசம்பர் 14-ம் தேதி அன்று நமது சபையின் கிறிஸ்மஸ் மரவிழா JSS International School-இல் வைத்து மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறுவர் வேதபாடசாலை, Corner Stone மற்றும் தமிழ் வகுப்பு பிள்ளைகளுமாகச் சேர்ந்து தாங்கள் கற்றுக்கொண்ட வேதவசனங்களின் அடிப்படையில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி நம்மை மகிழ்வித்தார்கள். இதற்காக உழைத்த சிறுவர் வேதபாடசாலை

பொறுப்பாளர் திருமதி ஜெயந்தி சம்பத் அவர்களுக்கும், Corner Stone பொறுப்பாளர் திரு. ஜான்சன் அவர்களுக்கும், மற்றும் அவர்களோடு இணைந்து பணிசெய்த அனைத்து ஆசிரியர்களுக்கும் தன்னார்வத் தொண்டர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கு நமக்கு இடம் கிடைக்க உதவிய திருமதி. லீலா பாலன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது கிறிஸ்மஸ் ஆராதனையில் கோயம்புத்தூர் திருமண்டலத்தின் பேராயர் Rt. Rev. Dr. Timothy Ravinder அவர்கள் தேவனுடைய மனித அவதாரத்தின் மகிமையை அவருடைய பிறப்பின் மூலமாக உணர சிறப்பாகச் செய்தி கொடுத்தார்கள். 2018-ம் வருடம் முழுவதுமாக தேவன் நம் வாழ்வில் செய்த நன்மைகளை எண்ணித் துதிப்பதற்காக 29-ம் தேதி சனிக்கிழமை அன்று காலை ஆராதனை சிறப்பு நன்றி செலுத்தும் ஆராதனையாக நமது தலைமை போதகர் அவர்கள் நடத்தித்தந்தார்கள். 31-ம் தேதி அன்று பழையவருட துதி ஆராதனையும் அதைத் தொடர்ந்து புதுவருட உடன்படிக்கை ஆராதனையும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. புதியவருட ஆராதனையைத் தொடர்ந்து ஆயர்களை கனப்படுத்தும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

உங்கள் ஜெபங்களில் இம்மாதத்தில் நடைபெறவிருக்கும் அனைத்து நிகழ்வுகளுக்காகவும், நமது திருச்சபைக்காகவும், திருச்சபையின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஊக்கமாக ஜெபிக்குமாறு மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

Jernaus Britto, Secretary.

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. Joshua Arthur | 2810 | Dubai |
| 2 | Mr. Benet Santhosh Amalraj | 2811 | Dubai |
| 3 | Mr. N.Inbaraj | 2812 | Dubai |
| 4 | Mr. S.Immanuel Jebaraj | 2813 | Dubai |
| 5 | Miss Anntly Abigail John | 2814 | Dubai |

## மோசே

சிப்போராள் கூறின காரியங்கள் ரெகுவேலிற்கு நன்றாய் கண்டது. ஆகவே, அவர் தன் மகளின் வார்த்தையின்படி ஆட்களை அழைத்துக்கொண்டு, மோசேக்கு என்னவாயிற்று என்று அறிந்து வரும்படி சென்றார்.

நிலவறையில் மோசே எழுந்து நின்று, தன் முற்பிதாக்களின் தேவனாகிய தங்கள் தேவனைத் துதித்து, ஜெபித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அவரை அங்கிருந்து வெளியே கொண்டுவரக் கட்டளையிட்டார். அவர்கள் அவரை வெளியில் எடுத்து, முடியைச் சிறைத்து, சிறைச்சாலை வஸ்திரங்களைக் களைந்து, உணவாக அப்பத்தை அளித்தனர்.

பின்பு மோசே ரெகுவேலின் வீட்டிற்குச் சென்று பின்புறமுள்ள தோட்டத்திற்குச் சென்று தன்னை அதிசயமாய் நடத்திய தேவனாகிய கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்.

பின்பு மோசே என்னும் அம்ராமின் குமாரன், மீதியானிலே ரெகுவேலின் மகளாகிய சிப்போராளை மனைவியாக்கிக் கொண்டான். சிப்போராள் யாக்கோபின் குமாரத்திகளைப் போன்று நடந்துகொண்டு, நீதியாக செயல்படும் காரியங்களில் சாராளையோ, ரெபேக்காளையோ, லேயாளையோ இவர்களைவிட குறைந்தவளாகக் காணப்படவில்லை.
சிப்போராள் ஒரு குமாரனைப் பெற்று அவனுக்கு கெர்சோம் என்று பேரிட்டார். அவனுக்கு ரெகுவேலின் கட்டளைப்படி விருத்தசேதனம் பண்ணப்படவில்லை.

சிப்போராள் மறுபடியும் ஒரு குமாரனைப் பெற்றார். மோசே அவனுக்கு விருத்தசேதனம் பண்ணுவித்து, அவனுக்கு எலியேசர் என்று பெயரிட்டார்.

பார்வோன் இஸ்ரவேல் மக்களின் வேலைப்பளுவை அதிகரித்துக் கொண்டே இருந்தார். அவர்கள் செய்யும் செங்கலுக்குக் கூலியாக அவர்களே போய் வைக்கோலையும் சேர்த்துக்கொள்ளக் கட்டளையிட்டான். அவர்கள் கசந்த உள்ளத்தோடு, இடும் அழுகையின் சத்தமும், அவர்களது கூக்குரலும் அவர்களது கண்ணீரும் தேவ சமுகத்தை எட்டினது. தேவன் அவர்களது அழுகையைக் கேட்டார். எகிப்தியர் அவர்களை ஒடுக்கும் ஒடுக்கத்தையும் பார்த்தார். அவர்களது ஜெபத்தைக் கேட்டு, அவர்களை விடுவித்துக் கானானுக்கு அழைத்துக்கொண்டு செல்ல முடிவு செய்தார்.

அந்நாட்களில் மோசே தன் மாமனாகிய ரெகுவேலின் ஆடுகளை மேய்த்துக்கொண்டு வந்தார். அப்பொழுதுதான் நாம் அறிந்திருக்கிறபடி தேவன் அவரை முட்செடியின் மூலமாக வெளிப்பட்டு அவரை தம் ஜனத்தை மீட்கும் பொறுப்பை ஒப்படைக்கின்றார்.

மோசே தன்னைச் சந்தித்த தேவனைப் பற்றி ரெகுவேலிடம் கூற, அவர் அவரை வாழ்த்தி சமாதானத்தோடே எகிப்திற்குச் செல்ல சம்மதித்தார். மோசே எழுந்து தன் மனைவியோடும் இரண்டு குமாரரோடும் எகிப்திற்குச் சென்றார். மோசே தன் மகனுக்கு, ரெகுவேலின் வார்த்தைக்குச் செவிமடுத்து விருத்தசேதனம் பண்ணாததினால் கர்த்தருடைய தூதன் அவரைக் கொல்லப் பார்த்தார். உடனே சிப்போராாள் அவனை விருத்தசேதனம் செய்து, மோசேயை கர்த்தருடைய தூதனின் கைக்கு விடுவித்தாள்.

ஆரோன் எகிப்திலே ஆற்றின் ஓரத்தில் நடந்து கொண்டிருந்தபோது, கர்த்தர் அவருக்கு எதிர்பட்டு, போய் வனாந்தரத்தில் வந்துகொண்டிருக்கும் உன் சகோதரனாகிய மோசேயோடு சேர்ந்துகொள் என்றார். ஆரோன் மோசேயை கர்த்தருடைய பார்வதத்திலே சந்தித்தார். ஆரோன் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, சிப்போராளையும் அவரது இரண்டு குமாரரையும் கண்டு, இவர்கள் யார் என மோசேயிடம் கேட்டார். அப்பொழுது, மோசே கர்த்தர் தனக்கு மீதியான் தேசத்திலே தந்த மனைவியும் குழந்தைகளும் என்றார். உடனே ஆரோன் அவரிடம் இவர்களைத் திரும்ப மீதியான் தேசத்திற்கே அனுப்பிவிடு. அவர்கள் அங்கே சென்று தங்கள் தகப்பனாரின் வீட்டிலே தங்கியிருக்கட்டும் என்றார். உடனே மோசே அவருக்குச் செவிக்கொடுத்து சிப்போராளையும் அவரது குமாரரையும் திரும்ப மீதியான் தேசத்திற்கே திருப்பி அனுப்பிவிட்டார். கர்த்தர் அவர்களை அழைக்குமட்டும் அவர்கள் மீதியான் தேசத்திலேயே இருந்தார்கள்.

தொடரும்...

நன்றி: யாசேரின் புத்தகம்.

தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

# வருந்துகிறோம்

**"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"**

நமது சபை அங்கத்தினர்

Mrs.Stella David அவர்களின் தகப்பனார்

Mr.Henry Solomon அவர்கள் கடந்த 12-12-2018 அன்று

கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# புத்தாண்டு 2019

பூமத்தியின் இராமத்தியில் பரிகரிப்பின் வீரியன்
நாமத்தால் நீதியின் சூரியன் !
பூம்புது வெண்பனி வீழ்இலை தாழ்தலைமுன்
பிறந்துவரும் ஆண்டவனின் ஆண்டுஉடன்

விண்வேந்தன் மண்வந்து தன்மூச்சைச் சுவாசித்தான்
விண்மண் கண்டுணர்வை இணைப்பித்தான்
கண்ணுக்கோர் இமைபோல மண்ணுக்கொரு மறைபோல
தன்னையே அர்ப்பணித்துத் தனித்தவன்

எட்டுத் திக்கிடை முட்டிமோதலில் எதிரொலிக்கும்
கிருபை சத்திய விருதானான்
கொட்டும் இசையும் மெட்டின் விசையும்
வாழ்த்துப் பாட்டுப்பாடும் வானகம்

பங்நெடுங் காலமாய் முங்நெடுக்கும் நேரமாய்
நில்லாது நிலைமாறிச் செல்லாது
உந்திவந்து முத்திரையைக் குத்தியாச்சு, புத்தொளியாய்
ஈராயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டாச்சு

சந்ததிபின் சந்ததியாய்த் தொடர்ந்து சந்திப்பது
சரித்தரச் சக்கரமாய்ச் சுழல்வது
சிந்தித்துச் சந்தித்த சாதனைகளைப் பதிப்பது
சந்தோசம் உலகறியச் சிறப்பிப்பது

கண்மூடா விண்கலங்கள் விண்ணூடே மிதக்குது
அண்டஞ்சுழல் கண்டங்களைக் காப்பது
கணைகளையும் துணைகளாய்ப் படைத்துப் பதுக்கிக்
கிடக்குது, பயத்திலே உலகமுகம்

ஒளிவிளக்கும் களிவெடியும் கொழுத்தி மகிழுது
மெய்மறந்து உய்யுங்கீதம் பாடுஉலகம்
கீழத்திசை தொடங்கி மேலத்திசை அடங்கி
ஆர்ப்பரிப்பும் ஆலயமணியும் வாகனஒலியும்

பல்வளமும் நல்மனமும் சொல்வழங்கும் உள்உறவும்
கைகுலுக்கிக் களித்திருக்க வாழ்த்துகிறோம்
பல்கலையும் நல்வினையும் வளர்த்தெடுக்க வேண்டுகிறோம்
வணங்கிநின்று புத்தாண்டுகொண்டு போற்றுகிறோம் !

ஆதாரம் : நற்செய்தி நூல்கள் நடைமுறைகள்
கவிதை எண் : 214.
கவி புனைவு : மணிமுத்து.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஜனவரி 2019

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 04-01-2019 | மீட்பிற்கான வெளிப்பாடு | யாத்தி. 3:1-14 | அப்போ. 16:6-12 | யோவான் 12:20-32 | 27 |
| 11-01-2019 | தூய்மையாயிரு | உபாகமம் 7:1-11 | எபேசி. 5:18-21 | யோவான் 17:13-17 | 5 |
| 18-01-2019 | அன்பிலே ஐக்கியம் | ஆமோஸ் 9:5-12 | 1 கொரிந். 1:10-18 | யோவான் 15:11-17 | 30 |
| 25-01-2019 | பவுலின் மனந்திரும்புதல் | எரேமியர் 1:4-10 | அப்போ. 9:1-18 | மத்தேயு 19:27-30 | 67 |

# ஆராதனை பாடல்கள் - ஜனவரி 2019

பாமாலை - கீர்த்தனை

| | |
|---|---|
| ஆராதனை ஆரம்ப கவி | பாமாலை 33 - முதல் சரணம் |
| ஆராதனை இறுதி கவி | பாமாலை 194 - அருள் ஏராளமாய் |

04-01-2019

| | | |
|---|---|---|
| பாமாலை | 62 | விண்மீன் நோக்கிக் களிப்பாய் |
| பாமாலை | 43 | விண்ணோர்கள் போற்றும் ஆண்டவா |
| கீர்த்தனை | 41 | கண்டேன் என் கண்குளிர |
| கீர்த்தனை | 38 | அரசனைக் காணாமல் |
| கீர்த்தனை | | பயணிகள் பாதையில் |

11-01-2019

| | | |
|---|---|---|
| பாமாலை | 103 | எவ்வண்ணமாக |
| கீர்த்தனை | | பாதை தெரியாத ஆட்டைப்போல |
| பாமாலை | 96 | என் முன்னே மேய்ப்பர் |
| கீர்த்தனை | 121 | விசுவாசியின் காதில்பட |
| கீர்த்தனை | 141 | கிருபை புரிந்தெனை ஆள் |

18-01-2019

| | | |
|---|---|---|
| பாமாலை | 16 | போற்றும் போற்றும் |
| பாமாலை | 39 | களிப்புடன் கூடுவோம் |
| கீர்த்தனை | 135 | ஆ காலமல்லோ |
| கீர்த்தனை | | பாத்திரம் நிரம்பி |
| கீர்த்தனை | 172 | சுந்தரப்பரம தேவ |

25-01-2019

| | | |
|---|---|---|
| பாமாலை | | வாழ்க எம் தேசமே |
| பாமாலை | 123 | நான் உம்மை முழுமனதாய் |
| கீர்த்தனை | 181 | பொக்கிஷம் சேர்ந்திடுங்கள் |
| கீர்த்தனை | 182 | வீராதி வீரர் இயேசு |

# நீங்கள் கிறிஸ்தவரா...

நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்.
ரோமர் 12:12.

மகனே...
இதோ பார்...
வாழ்க்கையில்
ஆபத்துக்கள்
இல்லை என்றோ
துன்பங்கள்
இல்லை என்றோ
எண்ணிவிடாதே
ஆனாலும் கூட
மகனே...
கர்த்தரை
விசுவாசித்து
நம்பிக்கை
வைத்தால்...
பாவத்தின் அடியில்
தண்ணீர்
தேங்கிநிற்காது...
ஓடிக்கொண்டிருக்கும்
நீரைப்போல
பக்தனின்
எவ்வித துன்பமும்
நிற்காது
போய்விடுவதைக்
காண்பாய்.
அம்மா
அமுதூட்டுவார்
என்பது
குழந்தையின்
நம்பிக்கை.
மழை பொழியும்
கழனி செழிக்கும்
என்பது
விவசாயியின்
நம்பிக்கை.

நன்று வரினும்
தீது வரினும்
கர்த்தரின்
மேல்மட்டுமே
நம்பிக்கை
வைக்கும்
பக்தன்
ஒவ்வொரு
செயலிலும்
கர்த்தரையே
காண்கிறான்.
வேறெதையும்
காண்பதில்லை
நாம்...
கர்த்தரிடம் வைக்கும்
நம்பிக்கையில்
சந்தோஷமாய்
இருப்போமே...
பிறர்தரும்
உபத்திரவத்தால்
உடலும் உள்ளமும்
கலங்கினாலும்
கர்த்தரிடம்
பாரத்தை விட்டுவிடு.
பொறுமையாய்
இருந்துவிடு.
பொறுத்தவர்
பூமியாள்வார்
என்பது பழஞ்சொல்.
உபத்திரவம்
கொடுப்பவரே
வெட்கி
தலைகுனியும்
காலம் வரும்

நாம்...
தலைநிமிர்ந்து
நடப்போமே...
ஜெபமும் தவமும்
கிறிஸ்தவத்தின்
இருகண்கள்.
அதிகாலை வேளை
செய்யும் ஜெபம்
வானுலகை எட்டும்
நல்ல பதில்
கிட்டும்.
எந்த வினையும்
நம்மை
விட்டுவிடும்.
எவ்வேளையும்
ஜெபம் செய்ய
உறுதி கொள்வோமே.
இன்றைய
புதுவருட
புலரியில்
என்றுமே
பூமியில்
நலமாய் வாழ
இயேசுதான்
நமக்கு
சரணாகதி
இயேசுவையே துதி
இயேசு
தரும் வளம்
வற்றாத ஜீவநதி.
அனைவருக்கும்
Mens Fellowship-ன்
புதுவருட
வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# திருச்சபை ஜெபநாள் 06-01-2019 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்;
நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும்." சங்கீதம் 31:17

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- நமது ஃபுஜைரா கிளைச்சபையின் ஸ்தோத்திரப்பண்டிகை ஆராதனை மற்றும் நமது எல்லா சபைகளின் கிறிஸ்மஸ் பாடல் ஆராதனை, கிறிஸ்மஸ் மரவிழா, கிறிஸ்மஸ், புதுவருட பண்டிகை ஆராதனைகள் யாவும் சிறப்பாக நடந்தேற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக,
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- நமது சபையின் இன்பச்சுற்றுலா சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

"நானோ, கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்,
நீரே என் தேவன் என்று சொன்னேன்." சங்கீதம் 31:14

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# வேலி அடைக்கப்பட்ட தோட்டம்

